SYDNEY WEST
Area Health Service

Produced by Sydney West Area Health Service,
Multicultural Health Network & NSW Multicultural
Health Communication Service.

**OTH7350 In an emergency dial 000 and ask for ambulance – Tamil**

# நெருக்கடி நிலையில் 000 என்ற எண்ணை அழைத்து அவசரசிகிச்சை வண்டி வேண்டுமெனக் கேளுங்கள்

## நீங்களும் உங்களது அவசரசிகிச்சை வண்டிச் சேவையும்

### எங்களது நோக்கம்

மருத்துவமனையில் சேர்க்கும் முன்பு மேம்பட்ட கவனிப்பு.

### எங்களது பணித்திட்டம்

- தரமான சேவை
- சமூகத்தினரது தேவைகளைப் பூர்த்தி செய்தல்
- மக்களின் அருமையை மதித்தல்
- அமைப்பிலுள்ள அனைவரும் இணைந்து செயலாற்றல்

இம்மாநிலத்தின் உடல்நலக் கவனிப்பு முறைமையின் ஒரு அங்க அமைப்பு என்ற முறையில் நோயுற்றவர்களை எடுத்துச்செல்லுதல், ஆபத்திலிருந்து காத்தல், மீட்டெடுத்தல் ஆகியவற்றிற்கான தரமான, உடனடி மருத்துவ சேவை மற்றும் ஆதரவினை மேற்கண்ட எமது கொள்கைகள் மூலம் நாங்கள் வழங்குவோம்.

### எங்கள் நிறுவனத்தின் உயர்வு அம்சங்கள்

கீழ்வரும் அம்சங்கள் மூலமாக நாங்கள் நோயுற்றோருக்கு முதலிடம் தருகிறோம்.

- கவனிப்பு
- மக்களை மதித்தல்
- இணைந்து பணியாற்றல்
- எமது பொறுப்புணர்ச்சியைக் காட்டல்
- சமூகத்தினரது திருப்தியில் கவனம் கூர்தல்
- தொழிலமையிலும், தொழில் நுட்பத்திலும் மேம்பாட்டை வளர்த்தல்
- சேவையளிப்பதில் சமநிலையை உறுதி செய்தல்

### எங்களது குறிக்கோள்கள்

- உயர்தர மருத்துவ சேவை, நோயுற்றோரை எடுத்துச்செல்லல் மற்றும் மீட்புச்சேவை வழங்கல்
- சமூகத்தினர், ஏனைய சுகாதார மற்றும் அவசரகாலச் சிகிச்சை அமைப்புகள் மற்றும் எங்களது பங்குதாரர்கள் ஆகியோருடன் இணைந்து செயலாற்றல்.
- மருத்துவமனையில் அனுமதிப்பதற்கு முன்பாய் கிட்டும் கவனிப்பைச் சிறப்பான முறையில் வழங்கும் ஊழியர்களை உருவாக்கி, ஆதரவளித்தல்.
- எங்களது நிர்வாக அமைப்பு, தொழிற்செயன்முறைகள் மற்றும் அமைப்புமுறைகளை மேம்பாடடையச் செய்வதன் மூலம் எமது செயல் நிறைவேற்றல் திறனையும், பெருமையையும் தொடர்ந்து சிறப்படையச் செய்தல்.

### உங்களது சிகிச்சை மற்றும்/அல்லது போக்குவரத்து குறித்து முடிவெடுத்தல்

பொதுமக்களுக்குத் தகுந்த மருத்துவ சிகிச்சையை உறுதிப்படுத்தவேண்டிய கடமை அவசர சிகிச்சை வண்டி அதிகாரிகளுக்கு உண்டு.

### மருத்துவசிகிச்சை மற்றும்/அல்லது போக்குவரத்து வசதியளிக்க மறுத்தல்

அவசரசிகிச்சை வண்டி அதிகாரிகள் உங்களை உங்களது விருப்பத்திற்கு மாறாக மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்ல மாட்டர். அளிக்கப்பட்ட அறிவுரையை நீங்கள் ஏற்க மறுப்பின், அறிவுரையை நீங்கள் நிராகரித்துவிட்டீர்கள் என்பதைக் வகுத்துரைக்கும் மறுப்புக்கூற்று ஒன்றில் நீங்கள் கையொப்பமிட வேண்டப்படுவீர்.

### உங்களைப் பற்றிய பதிவேட்டு விவரங்களைப் பெறுதல்

நியூ சௌத் வெய்ல்ஸ் மாநிலத்தின் அவசரசிகிச்சை வண்டிச் சேவையினர்உங்களுக்கு உயர்தரமான சேவையளிப்பதில் பற்றுறுதி கொண்டுள்ளவராவர். உங்களது அந்தரங்கத்தன்மையைப் பாதுகாப்பதும், உங்களது உரிமைகளையும், பொறுப்புக்களையும் நீங்கள் அறிந்துகொள்வதை உறுதிசெய்வதும் இதில் அடங்கும். உங்களது சொந்தத் தகவல்களைப் பாதுகாப்பது குறித்த நெறிமுறைகளைக் காட்டும் புதிய '2001 – –ஆம் ஆண்டின் சுகாதாரப் பதிவேடுகள் மற்றும் தகவல் இரகசியத்தன்மை சட்டம்' எங்களைக் கட்டுப்படுத்துகிறது. பொதுவாய் உங்களது வேண்டுகோளின் பெயரில் உங்களது அவசரசிகிச்சை வண்டிச் சேவை பதிவு விவரங்களை உங்களால் காண இயலும். உங்களைப் பற்றிய தகவல்களின் பிரதியொன்றைப் பெற 'அவசரசிகிச்சை வண்டிச் சேவை மருத்துவப் பதிவேடுகள்' (Ambulance Service Medical Records) அலுவலகத்திற்கு நீங்கள் எழுத்து மூலம் விண்ணப்பிக்க வேண்டும் (கட்டணங்கள் செல்லுபடியாகும்).

## 'தகவல் சுதந்திரம்' [Freedom of Information (FOI)] என்பதை எவ்வாறு பயன்படுத்துவது

FOI சட்டத்தின் கீழ் உங்களது கோப்புக்களை நீங்கள் பார்க்க விரும்பினால்

- உங்களது கோப்புக்களை வைத்திருக்கும் அவசரசிகிச்சை வண்டிச் சேவையின் FOI ஒத்திசைவாளருக்குக் (coordinator) கடிதம் எழுத வேண்டும்.
- கட்டணத்தை $15.00 ஆகக் குறைக்கும் சலுகையை நீங்கள் பெற்றிருக்காவிடின் ஒவ்வொரு வேண்டுகோளுக்கும் பொதுவாய் $30.00 செலுத்த வேண்டும்.
- நீண்ட ஆய்வுகளுக்குத் தேவையிருப்பின் செயல்முறைக் கட்டணம் ஒன்றைச் செலுத்தவேண்டும்.

The FOI Coordinator
Ambulance Service of New South Wales
Locked Bag 105
Rozelle NSW 2039

## மெடிகெயர் (Medicare)

மெடிகெயர் வசதியில் அவசரசிகிச்சை வண்டிச் சேவை அடக்கமில்லை.

### பாராட்டு தெரிவித்தல்/புகார் செய்தல்

அவசரசிகிச்சை வண்டிச் சேவை மூலம் நீங்கள் பெற்ற கவனிப்பு அல்லது சேவையைப் பற்றிய உங்கள் கருத்தை நீங்கள் தெரிவிக்கலாம். இது பாராட்டு அல்லது புகார் வடிவிலிருக்கலாம். வாய் வார்த்தை மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ உங்களது பாராட்டையோ அல்லது புகாரையோ நீங்கள் தெரியப்படுத்தலாம். எந்த ஒரு புகாரும் அக்கறையுடனும், இரகசியத் தன்மையுடனும் கவனிக்கப்படும்.

உங்களது புகாரைக் கவனிக்கும் விதத்தில் உங்களுக்கு திருப்தியில்லையெனில் (02) 9320 7777 என்ற இலக்கம் மூலமாகவோ அல்லது உள்ளூர் அழைப்புக் கட்டணமொன்றுக்கு 1300 655 200 என்ற எண் மூலமாகவோ (திங்கள் – –வெள்ளி காலை 9.00 மணியில் இருந்து மாலை 5.00 மணி வரை) நியூ சௌத் வெய்ல்ஸ் மாநில

அவசரசிகிச்சை வண்டிச் சேவையினரது 'தொழில் தரம் மற்றும் நடத்தைப் பிரிவு' (Professional Standards and Conduct Unit, Ambulance Service of NSW) என்ற அமைப்புடன் தொடர்பு கொள்ளுங்கள்.

## பூர்வீகப் பழங்குடியினர் மற்றும் டாரிஸ் நீர்ச்சந்தித் தீவினருக்கான சேவை (Aboriginal and Torres Strait Islander Service)

பூர்வீகப் பழங்குடியினர் மற்றும் டாரிஸ் நீர்ச்சந்தித் தீவினரது விவகாரங்கள் குறித்த விசாரணைகளை பூர்வீகக்குடியினருக்கான வேலைவாய்ப்பு மற்றும் தொடர்பிணைப்பு அதிகாரிக்கு (Aboriginal Employment and Liaison Officer)
1300 655 200 என்ற எண்ணின் மூலம் உள்ளூர் தொலைபேசிக் கட்டணச் செலவில் அனுப்பலாம்.

## சகிப்புத் தன்மை அற்ற நிலை (Zero tolerance)

வன்முறையற்ற சூழ்நிலையில் பணியாற்றும் உரிமை அனைத்து நியூ சௌத் வெய்ல்ஸ் மாநில அவசரசிகிச்சை வண்டிச் சேவையினருக்கும் உண்டு. அவர்களது சொந்தப் பாதுகாப்பிற்கு ஊறு விளைவிக்காத சூழலில் உடல்நல சேவையைப் பெறும் உரிமை நோயுற்றோருக்கும், மற்றோருக்கும் உண்டு. உடல்நல சேவையளிக்கும் இடங்களின் மீதோ அல்லது உடல்நலம் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எவ்வொரு இடத்தின் மீதோ இழைக்கப்படும் அனைத்து விதமான வன்முறைகளுக்கும் சகிப்புத்தன்மை அறவே அற்ற பதில் தரும் கொள்கையை அவசரசிகிச்சை வண்டிச் சேவை மேற்கொண்டுள்ளது.